
# பாரதியார்
## குழந்தைப் பாடல்கள்

பகுதி-1



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



# மகாகவி

# சி. சுப்பிரமணிய பாரதியார்

# குழந்தைகளுக்கான பாரதியார் பாடல்கள்



| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பாப்பாப் பாட்டு | 1 |
| 2. | ஆனை ஆனை அழகர் | 4 |
| 3. | காக்கைச் சிறகினிலே | 5 |
| 4. | அச்சமில்லை அச்சமில்லை | 6 |
| 5. | பூனை அண்ணா | 8 |
| 6. | மயிலே, மயிலே ஆடிவா | 9 |
| 7. | மழையை நம்பி ஏலேலோ | 10 |
| 8. | உறுதி வேண்டும் | 11 |
| 9. | சுட்டும் விழிச் சுடர் தான் | 12 |
| 10. | முரசு | 13 |
| 11. | அன்னையை வேண்டுதல் | 14 |
| 12. | அம்மாக்கண்ணு பாட்டு | 15 |
| 13. | நிற்கட்டுமா போகட்டுமா | 16 |
| 14. | வருகின்ற பாரதத்தை வாழ்த்தல் | 18 |
| 15. | கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை | 20 |



# 1. பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா, -- நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, -- ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறுகுருவி போலே -- நீ
திரிந்து பறந்துவா பாப்பா,
வண்ணப் பறவைகளைக் கண்டு -- நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா.





கொத்தித் திரியுமந்தக் கோழி -- அதைக்
கூட்டி விளையாடு பாப்பா,
எத்தித் திருடுமந்தக் காக்காய் -- அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு -- பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு -- என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.



பொய்சொல்லக் கூடாது பாப்பா -- என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா -- ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா; -- குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;
நீதி, உயர்ந்தமதி, கல்வி -- அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.



# 2. ஆனை ஆனை அழகர்

ஆனை ஆனை
அழகர் ஆனை

அழகரும் சொக்கரும்
ஏறும் ஆனை

கட்டிக்கரும்பை
முறிக்கும் ஆனை

காவேரி தண்ணீரை
கலக்கும் ஆனை

குட்டி ஆனைக்குக்
கொம்பு முளைச்சுதாம்

பட்டணமெல்லாம்
பறந்தோடிப் போச்சுதாம்!





# 3. காக்கைச் சிறகினிலே

காக்கைச் சிறகினிலே
நந்தலாலா - நின்றன்
கரியநிறந் தோன்றுதையே
நந்தலாலா;



பார்க்கும் மரங்களெல்லாம்
நந்தலாலா - நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே
நந்தலாலா;

கேட்கு மொலியிலெல்லாம்
நந்தலாலா - நின்றன்
கீத மிசைக்குதடா
நந்தலாலா;

தீக்குள் விரலைவைத்தால்
நந்தலாலா - நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா
நந்தலாலா.


# 4. அச்சமில்லை அச்சமில்லை

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்துநின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
துச்சமாக எண்ணிநம்மைத்
தூறுசெய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
பிச்சைவாங்கி உண்ணும்வாழ்க்கை
பெற்றுவிட்ட போதிலும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
இச்சைகொண்ட பொருளெலாம்
இழந்துவிட்ட போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.





நச்சைவாயி லேகொணர்ந்து
  நண் பரூட்டு போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
  அச்சமென்ப தில்லையே.
பச்சையூ னியைந்தவேற்
  படைகள்வந்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
  அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து
  வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
  அச்சமென்ப தில்லையே.





# 5. பூனை அண்ணா





எங்கள் வீட்டுப் பூனை
இருட்டில் உருட்டும் பூனை
அங்கும் இங்கும் தேடும்
ஆளைக் கண்டால் ஓடும்
தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை ஏறிக் குடிக்கும்
நாவால் முகத்தைத் தொடைக்கும்
நாற்காலியின் கீழ்ப் படுக்கும்









# 6. மயிலே மயிலே ஆடிவா



மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!



பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!





# 7. மழையை நம்பி ஏலேலோ

மழையைநம்பி ஏலேலோ மண்இருக்க ஜலசா
மண்ணைநம்பி ஏலேலோ மரம்இருக்க ஜலசா.
மரத்தைநம்பி ஏலேலோ கிளைஇருக்க ஜலசா
கிளையைநம்பி ஏலேலோ இலைஇருக்க ஜலசா.
இலையைநம்பி ஏலேலோ பூவிருக்க ஜலசா
பூவைநம்பி ஏலேலோ பிஞ்சிருக்க ஜலசா.
பிஞ்சைநம்பி ஏலேலோ காயிருக்க ஜலசா
காயைநம்பி ஏலேலோ பழம்இருக்க ஜலசா.
பழத்தைநம்பி ஏலேலோ என் மகன்இருக்க ஜலசா
மகனைநம்பி ஏலேலோ நீஇருக்க ஜலசா.
உன்னைநம்பி ஏலேலோ நான்இருக்க ஜலசா
என்னைநம்பி ஏலேலோ எமன்இருக்க ஜலசா.
எமனைநம்பி ஏலேலோ காடிருக்க ஜலசா
காட்டைநம்பி ஏலேலோ புல்லிருக்க ஜலசா.






# 8. உறுதி வேண்டும்

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்

கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்கவேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம் ஓம் ஓம் ஓம்.





# 9. சுட்டும் விழிச் சுடர் தான்

சுட்டும் விழிச் சுடர் தான், - கண்ணம்மா!
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி, - கண்ணம்மா!
வானக் கருமைகொல்லோ?
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் - தெரியும்
நக்ஷத்தி ரங்களடீ!

சோலைமல ரொளியோ - உனது
சுந்தரப் புன்னகை தான்?
நீலக் கடலலையே - உனது
நெஞ்சி லலைகளடீ!
கோலக் குயிலோசை - உனது
குரலி னிமையடீ!
வாலைக் குமரியடீ, - கண்ணம்மா!
மருவக்காதல் கொண்டேன்.





# 10. முரசு

வெள்ளை நிறத்தொரு பூனை -- எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை; -- அவை
பேருக் கொருநிற மாகும்;

சாம்பல் நிறமொரு குட்டி, -- கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி, -- வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி,

எந்த நிறமிருந்தாலும் -- அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும் -- இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் -- அதில்
மானுடர் வேற்றுமை யில்லை.
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் -- இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.



# 11. அன்னையை வேண்டுதல்

எண்ணிய முடிதல் வேண்டும்
  நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
  தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
  பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
  நசித்திடல் வேண்டும் அன்னாய்.



# 12. அம்மாக்கண்ணு பாட்டு

“பூட்டைத் திறப்பது கையாலே நல்ல
மனந் திறப்பது மதியாலே”
பாட்டைத் திறப்பது பண்ணாலேஇன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே.

ஏட்டைத் துடைப்பது கையாலே மன
வீட்டைத் துடைப்பது மெய்யாலே,
வேட்டை யடிப்பது வில்லாலேஅன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே.

காற்றை யடைப்பது மனதாலே இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையாலே,
சோற்றைப் புசிப்பது வாயாலேஉயிர்
துணி வுறுவது தாயாலே.





# 13. நிற்கட்டுமா போகட்டுமா

செக்கச் சிவந்திருப்பாள் - குட்டி
செட்டிமகள் போலிருப்பாள்
வாரி முடிஞ்சிருப்பாள் - குட்டி
வந்திருப்பாள் சந்தைக்கடை.

சந்தையிலே மருக்கொழுந்து - குட்டி
சரசமாத்தான் விற்குதடி
கையிலொரு காசும்இல்லை - குட்டி
கடன்கொடுப்பார் ஆரும்இல்லை.

வட்டவட்டப் பாறையிலே - குட்டி
வரகரிசி தீட்டையிலே
ஆர்கொடுத்த சாயச்சீலை - குட்டி
ஆலவட்டம் போடுதடி?



மஞ்சள் புடவைக்காரி - குட்டி
மாதுளம்பூக் கூடைக்காரி
மஞ்சள் புடவையிலே - குட்டி
மருக்கொழுந்து வீசுதடி.

கானகக் கரிசலிலே
களையெடுக்கும் பொண்மயிலே
நீலக் கருங்குயிலே
நிற்கட்டுமா போகட்டுமா?



# 14. வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

ஒளி படைத்த கண்ணினாய் வாவாவா
உறுதிகொண்ட நெஞ்சினாய்வாவாவா
களிபடைத்த மொழியினாய்வாவாவா
கடுமைகொண்ட தோளினாய்வாவாவா
தெளிவுபெற்ற மதியினாய் வாவாவா
சிறுமைகண்டு பொங்குவாய் வாவாவா
எளிமைகண்டு இரங்குவாய் வாவாவா
ஏறுபோல் நடையினாய் வாவாவா

இளைய பார தத்தினாய் வாவாவா
எதிரிலா வலத்தினாய் வாவாவா
ஒளியிழந்த நாட்டிலே -- நின்றேறும்
உதயஞாயி றொப்பவே வாவாவா
களையிழந்த நாட்டிலே -- முன்போலே
கலைசிறக்க வந்தனை வாவாவா
விளையு மாண்பு யாவையும் -- பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வாவாவா



வெற்றிகொண்ட கையினாய் வாவாவா

விநயம் நின்ற நாவினாய்வாவாவா

முற்றி நின்ற வடிவினாய் வாவாவா

முழுமைசேர் முகத்தினாய்வாவாவா

கற்ற லொன்று பொய்க்கிலாய்வாவாவா

கருதிய தியற்றுவாய் வாவாவா

ஒற்றுமைக்கு ளுய்யவே -- நாடெல்லாம்

ஒருபெருஞ் செயல்செய்வாய் வாவாவா



# 15. கண்ணன் - என் விளையாட்டுப் பிள்ளை

தீராத விளையாட்டுப் பிள்ளை -- கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை. (தீராத)

தின்னப் பழங்கொண்டு தருவான்; -- பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால் -- அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். (தீராத)

தேனொத்த பண்டங்கள் கொண்டு -- என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்;
மானொத்த பெண்ணடி என்பான் -- சற்று
மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான். (தீராத)



அழகுள்ள மலர்கொண்டு வந்தே -- என்னை
அழஅழச் செய்துபின், “கண்ணை மூடிக்கொள்;
குழலிலே சூட்டுவேன்” என்பான் -- என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான். (தீராத)

பின்னலைப் பின்னின் றிழுப்பான்; -- தலை
பின்னே திரும்புமுன் னேசென்று மறைவான்;
வன்னப் புதுச்சேலை தனிலே -- புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். (தீராத)

புள்ளாங் குழல்கொண்டு வருவான்; -- அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்;
கள்ளால் மயங்குவது போலே -- அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம். (தீராத)





### மகாகவி

## சி. சுப்பிரமணிய பாரதியார்

- தமிழ் இலக்கிய உலகமே போற்றும் முண்டாசு கவிஞர் இவர்.
- கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி போன்றன இவரது புகழ் பெற்ற படைப்புகள்.
- தேசியக்கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, பாடகர் என பட்டம் பல பெற்றவர்.
- குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் சாதிப்பிரிவு என்னும் நஞ்சு விதைக்கப்படுதல் கூடாது என்று கருதியவர் பாரதி.
- கேலிச்சித்திரங்கள் வரையும் முறையைத் தமிழுக்கு கொடுத்தவர் இவரே.
- தமிழ், ஆங்கிலம், கணிதம், வடமொழி, இந்தி, பிரெஞ்ச், வங்காளம், அரபு என பன்மொழி புலமை பெற்றவர்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com